பாடம் 11

# விடுதலை

***நீ கண்ட கனவு உனது நினைவிற்கு வராமல் மறந்துபோயிருக்கிறாயா? தான் கண்ட கனவை மறந்துபோன ஒருவரைப்பற்றி இன்று நாம் பார்க்க இருக்கிறோம். அவர் யார்? அவர் கண்ட கனவு என்ன என்று பார்ப்போமா?***

யோசேப்பு அநியாயமாகச் சிறைப்பட்டான். யோசேப்பு களங்கமற்றவன் என்று தேவனுக்கு நன்கு தெரியும். ஆனாலும் தேவன் யோசேப்பைச் சிறையினுள் இருக்க அனுமதித்தார். அது நன்மைக்கே என யோசேப்பு நம்பினார். அநேக சமயங்களில் தேவன் தம் பிள்ளைகளை நடத்தும்விதம் விநோதமாக இருக்கும்.

சிறைச்சாலையின் தலைவன் யோசேப்புடைய வேலைகள் சிறப்பாக இருப்பதைக் கண்டான். மற்ற கைதிகட்குத் தலைவராக யோசேப்புவை நியமித்தான்.



பார்வோனின்அதிகாரிகள் சுயம்பாகி, பானபாத்திரக்காரன் என்னும் இருவர் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் ஒருநாள் கனவு கண்டு கலக்கத்துடன் இருந்தார்கள். கனவின் பொருள் அவர்கட்கு விளங்கவில்லை. ஆனால், யோசேப்புக்கு தேவன் இளம் வயதிலேயே கனவின் அர்த்தத்தை அறிந்து கொள்ளும் பாக்கியம் கொடுத்திருந்தார்.

அவர்களது கனவுகளுக்கு யோசேப்பு சொன்ன விளக்கத்தின்படியே, பானபாத்திரக்காரனுக்கு மீண்டும் வேலைகிடைத்தது.

மேலும் இரண்டு வருடங்களை யோசேப்பு சிறையிலேயே கழிக்க நேர்ந்தது.

ஒருநாள் பார்வோன் இரு கனவுகள் கண்டான். முதல் கனவில் குண்டாக இருந்த ஏழு பசுக்கள் ஆற்றங்கரையில் புல்லை மேய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். பின்னர் மெலிந்து மிகவும் கேவலமாயிருந்த வேறு ஏழு

## மனன வசனம்

**நல்லது ... கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்;
அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்.
மத்தேயு 25:23.**

பசுக்கள் அந்த ஏழு குண்டுப் பசுக்களையும் விழுங்கிவிட்டதையும் பார்த்தான். விழுங்கிய பின்னும் அந்த ஒல்லிப்பசுக்கள் தம் வயிறு ஒட்டிப்போய் முன்போலவேதான் இருந்தன.

பின்னர் தனது இரண்டாவது கனவில் நன்கு செழித்து வளர்ந்திருந்த ஏழு குண்டுக் கதிர்களைப் பார்த்தான். பின்னர் சப்பிப்போய் ஒட்டிய நிலையில் இருந்த ஏழு சாவியான கதிர்களையும் பார்த்தான். அந்தச் செழுமையான ஏழு குண்டுக் கதிர்களையும் இந்தச் சாவிக் கதிர்கள் விழுங்கிவிட்ட பின்னும் அவை முன்போலவே சப்பிப்போய்தான் இருந்தது.

இந்த இரு கனவுகளும் பார்வோனை வெகுவாய்ப் பாதித்தது. கனவுகலைந்தது; விழித்துக்கொண்டான். அப்புறம் தூக்கம் வரவேயில்லை; கனவின் பொருளும் தெரியவில்லை.

எவராலும் பார்வோனின் கனவிற்குப் பொருள் சொல்ல முடியவில்லை. அந்தப் பானபாத்திரக்காரனுக்கு அப்போதுதான் யோசேப்பின் நினைவு வந்தது.

பார்வோனிடம் யோசேப்பைப் பற்றிச் சொன்னான். அவன் உடனே யோசேப்பை அழைத்துவரச் சொன்னான்.

யோசேப்பு பார்வோனை வணங்கினான். கனவிற்கான பொருளைச் சொல்லுதல் தேவனால் மட்டுமே முடியும் என்றும் சொல்லி தேவனை மகிமைப் படுத்தினான்.

பின்னர் பார்வோனிடம், “நீர் கண்ட இரு சொப்பனங்களும் ஒரே பொருளை உடையது. அடுத்து வரப்போகும் ஏழு வருடங்களும் மிகவும் செழிப்பானதாய் இருக்கும்; விளைச்சல் அமோகமாக இருக்கும். குண்டுப் பசுக்களும், செழுமையான கதிர்களும் அதைத்தான் குறிக்கின்றன.



**செய்தி**

**என்ன நடந்தாலும் நான் உண்மையாயிருப்பதற்கு தேவன் எனக்கு உதவுகிறார்.**

செழிப்பான ஏழுவருடங்கள் கழிந்த பின் கொடுமையான ஏழு வருடப் பஞ்சக்காலம் வரும். எந்தப் பயிருமே விளையாது.

எனவே, மிகப்பெரிய களஞ்சியங்களில் தானியங் களைப் பத்திரப்படுத்துங்கள். ஞானமுள்ள ஒருவனை அதற் குப் பொறுப்பானவனாக நிய மியுங்கள். இப்படிச் செய்தால் எகிப்தை அழிவினின்று காப்பாற்ற முடியும்'' என்றான். ‘‘தேவன் உம்மை நேசிப்பதா லேயே இவ்வுண்மையை தெரி யப்படுத்தியுள்ளார்'' எனவும் சொன்னான். பார்வோன் எகிப்தின்மேல் யோசேப்பு வையே தலைவனாக்கினான்.

தேவனுக்கு உண்மையா யிருந்தால், எந்தச் சூழ்நிலை யிலும் தேவன் உயர்த்துவார்.

*செய்முறை:* **தம்மிடம் உதவிவேண்டியவர்களுக்கு இரண்டு இடங்களிலில் யோசேப்பு உதவினார்; அந்த இரண்டு இடங்களும் எவை என்று கண்டுபிடி. அவ்வாறு நீ கண்டறிய கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளையும் எண்களையும் சரியாகப்பொருத்து; சரியான பதிலைக் கோட்டில் எழுது.**

**புதிர் 11**

| 5 | 15 | 3 | 6 | 1 | 7 | 11 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| லை | ம | ச் | வோ | சி | னி | ன் | றை |

| 4 | 12 | 10 | 13 | 8 | 14 | 16 | 9 |
|---|---|---|---|---|---|---|---|
| சா | அ | ர | ர் | தி | ண் | னை | பா |

____ ____ ____ ____ ____

1 2 3 4 5

____ ____ ____ ____ ____   ____ ____ ____ ____ ____

9 13 6 7 11   12 10 14 15 16